[18th November 1963

சர்க்கரை

* 249 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சீனி கண்ட்ரோல் முறையை ரத்து செய்ய உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில் எப்போது?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) & (b) The order was issued by the Government of India in exercise of the powers conferred by the Defence of India Rules. The State Government are not aware of any proposal to cancel the order.

* 250 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1961-62, 1962-63-ம் ஆண்டுகளில் உற்பத்தியான சர்க்கரையின் மொத்த அளவு என்ன?

(இ) மொத்த உற்பத்தியில் வெளியிடங்களுக்கு முறையே அனுப்பப்பட்ட சர்க்கரையின் அளவு என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்:

	During 1961–62 (in Tonnes.)	During 1962–63 (in Tonnes.)
(a)	1,27,387 (November 1961 to October 1962.)	85,707 (November 1962 to May 1963 only.)
(b)	27,057	8,679

திரு. கரு. சீமைச்சாமி: இப்போதுள்ள நிலைமையில் சீனி வாங்க வேண்டுமென்ருல் கள்ளமார்க்கட்டில் போய்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி கள்ளமார்க்கட்டைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்த கண்ட்ரோல் முறை நீடிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: நான் முந்திய கேள்வியில் சொன்ன பதில் தான் இதற்கும் பொருந்தும்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, நம் நாட்டில் உற்பத்தியாகிற சர்க்கரை நம் நாட்டுக்கு போதிய அளவு இருந்தும், கண்ட்ரோலை இந்த நாட்டில் வைத்துவிட்டு, சர்க்கரையை வெளியே அனுப்புவதின் நோக்கம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: நமக்கு வெளியில் சர்க்கரை அனுப்பும் போது நல்ல பணம் கிடைக்கிறது. நமக்கு வேண்டிய சர்க்கரைப் போக பாக்கியைத்தான் வெளியே அனுப்புகிறோம்.